# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகள் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 10ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) பாளையக்காரர்களின் கடமைகள் யாவை?

**பதில் :** 1. வரி வசூலிப்பது.
2. நிலப்பகுதிகளை நிர்வகிப்பது
3. வழக்குகளை விசாரிப்பது.
4. சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பது.
5. காவல் காப்பது (படிக்காவல் மற்றும் அரசுக் காவல்).
6. நாயக்க ஆட்சியாளர்கள் தங்கள் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள உதவுதல்.

2) கிழக்கு மற்றும் மேற்கில் அமையப்பெற்ற பாளையங்களைக் கண்டறிந்து எழுதுக.

**பதில் :** **கிழக்கில் அமையப்பெற்ற பாளையங்கள்:**
சாத்தூர், நாகலாபுரம், எட்டையபுரம் மற்றும் பாஞ்சாலங்குறிச்சி.
**மேற்கில் அமையப்பெற்ற பாளையங்கள்:**
ஊத்துமலை, தலைவன்கோட்டை, நடுவக்குறிச்சி, சிங்கம்பட்டி மற்றும் சேத்தூர்.

3) களக்காடு போரின் முக்கியத்துவம் யாது?

**பதில் :** 1. ஆற்காட்டு நவாப் கூடுதல் படைகளை மாபூஸ்கானுக்கு அனுப்பி திருநெல்வேலிக்குச் செல்லும் படையை பலப்படுத்தினார்.
2. கம்பெனியின் 1000 சிப்பாய்களோடு நவாபால் அனுப்பப்பட்ட 600க்கும் மேற்பட்ட படைவீரர்களையும் மாபூஸ்கான் பெற்றார்.
3. மேலும் கர்நாடகப் பகுதியிலிருந்து குதிரைப்படை மற்றும் காலாட்படையின் ஆதரவும் மாபூஸ்கானுக்கு இருந்தது.
4. மாபூஸ்கான் களக்காடு பகுதியில் தனது படைகளை நிலைநிறுத்தும் முன்பாக திருவிதாங்கூரின் 2000 வீரர்கள் பூலித்தேவரின் படைகளோடு இணைந்தனர்.
5. களக்காட்டில் நடைபெற்றப் போரில் மாபூஸ்கானின் படைகள் தோற்கடிக்கப்பட்டன.

4) கம்பெனியாருக்கும் கட்டபொம்மனுக்கும் இடையே சர்ச்சை ஏற்படக் காரணமாக விளங்கியது எது?

**பதில் :** 1. பாஞ்சாலங்குறிச்சியிடமிருந்து வரி வசூலிக்கும் உரிமையை கம்பெனி பெற்றிருந்தது.
2. அனைத்துப் பாளையங்களிலிருந்தும் வரிகளை வசூலிக்க கம்பெனி அதன் ஆட்சியர்களை நியமித்தது.
3. ஆட்சியர்கள் பாளையக்காரர்களை அவமானப் படுத்தியதோடு வரிகளை வசூலிக்க படையினைப் பயன்படுத்தினார்.
4. இதுவே கட்டபொம்மனுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே பெரும் பகை ஏற்பட அடிப்படையானது.

5) திருச்சிராப்பள்ளி பிரகடனத்தின் (1801) முக்கிய கூறுகளைத் தருக.

**பதில் :** 1. மருது சகோதரர்கள் ஜூன் 1801 இல் நாட்டின் விடுதலையை முன்னிறுத்திய ஒரு பிரகடனத்தை வெளியிட்டனர்.
2. இதுவே "திருச்சிராப்பள்ளி பேரறிக்கை" என்று அழைக்கப்படுகிறது.
3. பிரிட்டிஷாருக்கு எதிராக மண்டல, சாதி, சமய, இன வேறுபாடுகளைக் கடந்து நிற்பதற்காக முதலில் விடுக்கப்பட்ட அறைகூவலே இப்பேரறிக்கை ஆகும்.
4. இப்பேறிக்கை திருச்சியில் அமையப்பெற்ற நவாபின் கோட்டையின் முன் சுவரிலும், ஸ்ரீரங்கம் கோவிலின் சுற்றுச் சுவரிலும் ஒட்டப்பட்டது.
5. ஆங்கிலேயருக்கு எதிராகச் செயல்பட விழைந்த தமிழக பாளையக்காரர்கள் பலரும் ஒன்று திரண்டனர்.
6. சின்ன மருது ஏறத்தாழ 20,000 ஆட்களை ஆங்கிலேயர்களுக்கு எதிராகத் திரட்டினார்.
7. வங்காளம், சிலோன், மலேயா ஆகிய இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் படைகள் விரைந்து வந்தன.
8. புதுக்கோட்டை, எட்டையபுரம் மற்றும் தஞ்சாவூரின் அரசர்கள் பிரிட்டிஷாருடன் கைகோர்த்தார்கள்.
9. ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை என்ற உத்தி விரைவில் பாளையக்காரர்களின் படைகளில் பிரிவினையை ஏற்படுத்தியது.

6) கோபால நாயக்கரைத் தலைவராகக் கொண்ட திண்டுக்கல் கூட்டமைப்பில் யார் யார் இடம் பெற்றிருந்தார்?

**பதில் :** கோபால நாயக்கரைத் தலைவராகக் கொண்ட திண்டுக்கல் கூட்டமைப்பில் மணப்பாறையின் லெட்சுமி நாயக்கரும், தேவதானப்பட்டியின் பூஜை நாயக்கரும் இடம் பெற்றிருந்தனர்.

7) குயிலி குறிப்பு எழுதுக.

**பதில் :** 1. வேலுநாச்சியாரின் நம்பிக்கைக்குரிய தோழியாகத் திகழ்ந்த குயிலி உடையாள் என்ற பெண்களின் படைப் பிரிவைத் தலைமையேற்று வழிநடத்தினார்.
2. உடையாள் என்பது குயிலி பற்றி உளவு கூற மறுத்ததால் கொல்லப்பட்ட மேய்த்தல் தொழில் புரிந்த பெண்ணின் பெயராகும்.
3. குயிலி தனக்குத்தானே நெருப்பு வைத்துக் கொண்டு (1780) அப்படியே சென்று பிரிட்டிஷாரின் ஆயுதக்கிடங்கிலிருந்த அனைத்துத் தளவாடங்களையும் அழித்தார்.

8) மதராஸ் ஆட்சிக்குழு யார் முன்பு ஆஜராகும்படி கட்டபொம்மனை பணித்தது?

**பதில் :** மதராஸ் ஆட்சிக்குழு வில்லியம் ப்ரௌன், வில்லியம் ஓரம், ஜான் காஸாமேஜர் ஆகியோர் அடங்கிய குழுவின் முன்பாக ஆஜராகும்படி கட்டபொம்மனைப் பணித்தது.

9) இரண்டாவது பாளையக்காரர் போர் குறிப்பு எழுதுக.

**பதில் :** 1. கட்டபொம்மனின் கலகம் 1799இல் ஒடுக்கப்பட்ட போதும் 1800இல் மீண்டும் கலகம் வெடித்தது. பிரிட்டிஷாரின் குறிப்புகளில் இது இரண்டாவது பாளையக்காரர் போர் என்று குறிப்பிடப்படுகிறது.
2. இப்போரானது சிவகங்கையின் மருதுபாண்டியர், திண்டுக்கல்லின் கோபால நாயக்கர், மலபாரின் கேரள வர்மா, மைசூரின் கிருஷ்ணப்பா மற்றும் துண்டாஜி ஆகியோர் அடங்கிய கூட்டமைப்பால் வழிநடத்தப்பட்டது.

10) தீரன் சின்னமலை என்னென்ன வித்தைகளை கற்றுத் தேர்ந்தார்?

**பதில் :** தீரன் சின்னமலை சிலம்பு, வில்வித்தை, குதிரை ஏற்றம் மட்டுமில்லாமல் நவீன போர்முறைகளையும் கற்றுத் தேர்ந்தார்.

11) வேலூர் புரட்சி ஏன் தோல்வியடைந்தது?

**பதில் :** வெளியிலிருந்து உடனடியாக எந்தவொரு உதவியும் கிடைக்காத காரணத்தால் வேலூர் புரட்சி தோல்வியுற்றது.

12) புரட்சியின் பின் விளைவுகளைப் பற்றி சுருக்கமாக விவரிக்கவும்.

**பதில் :** 1. நீதிமன்ற விசாரணைக்குப்பின் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்ட ஆறுநபர்கள் பீரங்கியில் கட்டிய நிலையில் சுடப்பட்டும், ஐந்து நபர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டும் எட்டு நபர்கள் தூக்கிலிடப்பட்டும் கொல்லப்பட்டார்கள்.
2. கலவரத்தை அடக்குவதில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு பரிசுத்தொகையும் பதவி உயர்வும் வழங்கப்பட்டது. கர்னல் ஜில்லஸ்பிக்கு 7,000 பகோடாக்கள் வெகுமதியாக அளிக்கப்பட்டது.

13) பாளையம் என்றால் என்ன?

**பதில் :** 1. பாளையம் என்ற சொல் ஒரு பகுதியையோ, ஒரு இராணுவ முகாமையோ அல்லது ஒரு சிற்றாசையோ குறிப்பதாகும்.
2. பாளையக்காரர்கள் என்ற தமிழ்ச்சொல் இறையாண்மை கொண்ட ஒரு பேரரசுக்குக் கப்பம் கட்டும் குறுநில அரசைக் குறிக்கிறது.

14) வேலுநாச்சியாரின் திறமைகளைக் குறிப்பிடுக.

**பதில் :** 1. வேலுநாச்சியார் வளரி, சிலம்பம் போன்ற தற்காப்புகலைகளிலும், போர்க் கருவிகளைக் கையாளுவதற்கும் பயிற்சி பெற்றிருந்தார்.
2. ஆங்கிலம், பிரெஞ்சு, உருது போன்ற மொழிகளில் அவர் வல்லமை பெற்றிருந்தார்.
3. அவர் குதிரையேற்றத்திலும், வில்வித்தையிலும் திறமையானவராக விளங்கினார்.

15) கோபால நாயக்கர் பற்றி குறிப்பு வரைக.

**பதில் :** 1. கோபால நாயக்கர் திண்டுக்கல் கூட்டமைப்பிள் தலைவராக விளங்கினார்.

2. இவ்வமைப்பில் மணப்பாறையின் லெட்சுமி நாயக்கரும், தேவதானம்பட்டியின் பூஜை நாயக்கரும் இடம் பெற்றிருந்தனர்.

3. தனது நட்பை வெளிப்படுத்தும் விதமாக ஒரு நல்லுறவுக் குழுவை அனுப்பிவைத்த திப்பு சுல்தானால் கோபால நாயக்கர் ஈர்க்கப்பட்டார்.

4. கோயம்புத்தூரை மையமாகக் கொண்டு பிரீட்டிஷாரை எதிர்த்த அவர், பின்னாட்களில் கட்டபொம்மனின் சகோதரரான ஊமைத் துரையோடு இணைந்தார்.

5. உள்ளூர் விவசாயிகளின் ஆதரவுடன் ஆனை மலையில் கடும் போர் புரிந்தார்.

6. தனது மகளோடு தப்பிவந்த வேலுநாச்சியாருக்கு பாதுகாப்பு வழங்கினார்.

7. வேலுநாச்சியார் மீண்டும் சிவகங்கையைக் கைப்பற்றிட இராணுவ உதவியளித்தார்.

**5 மதிப்பெண் வினாக்கள்** 4 x 5 = 20

16) கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீரப் போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

**பதில் : வீரபாண்டிய கட்டபொம்மன்:**

தனது தந்தையாரான ஜெகவீரபாண்டிய கட்டபொம்மனின் இறப்பிற்குப் பின் பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரராக தனது முப்பதாவது வயதில் கட்டபொம்மன் பொறுப்பேற்றார்.

**பெரும் பகை:**

1. பாஞ்சாலங்குறிச்சியிடமிருந்து வரிவசூலிக்கும் உரிமையை கம்பெனி பெற்றிருந்தது.
2. அனைத்து பாளையங்களிலிருந்தும் வரிகளை வசூலிக்க கம்பெனி அதன் ஆட்சியர்களை நியமித்தது.
3. ஆட்சியர்கள் பாளையக்காரர்களை அவமானப்படுத்தியதோடு வரிகளை வசூலிக்க படையினைப் பயன்படுத்தினர்.
4. இதுவே கட்டபொம்மனுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே பெரும் பகை ஏற்பட அடிப்படையானது.

**ஜாக்சனோடு ஏற்பட்ட மோதல்:**

1. கட்டபொம்மனிடமிருந்து வசூலிக்க வேண்டிய நிலவரி நிலுவை 3310 பகோடாக்களாக இருந்தது.
2. இவற்றை வசூலிக்க ஜாக்சன் இராணுவத்தை அனுப்ப முனைந்தபோது மதராஸ் அரசாங்கம் அதற்கு அனுமதியளிக்க மறுத்தது.
3. 1798 ஆகஸ்ட் 18இல் இராமநாதபுரத்தில் வந்து தன்னைச் சந்திக்குமாறு ஜாக்சன் கட்டபொம்மனுக்கு ஆணை பிறப்பித்தார்.
4. 1798 செப்டம்பர் 19இல் கட்டபொம்மன் இராமநாதபுரத்தில் ஜாக்சனைச் சந்தித்தார். அவர் ஜாக்சனின் முன்பு மூன்று மணி நேரம் நிற்க வைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.
5. ஆபத்தை உணர்ந்த கட்டபொம்மன் ஊமைத்துரை உதவியுடன் தப்பிச் சென்றார். கட்டபொம்மனின் அமைச்சர் சிவசுப்ரமணியனார் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்.
6. 1798 டிசம்பர் 15 அன்று கட்டபொம்மன் மதராஸ் ஆட்சிக்குழுவின் முன்பாசு ஆஜராகி இராமநாதபுரத்தில் நிகழ்ந்தவற்றை விளக்கினார்.
7. அக்குழு கட்டபொம்மன் குற்றவாளி அல்ல என்று முடிவு செய்தது. ஜாக்சன் நிரந்தரப் பணி நீக்கம் செய்யப்பட்டார்.
8. கட்டபொம்மன் நிலுவைத் தொகையில் 1080 பகோடாக்கள் நீங்கலாக பிற நிலுவைத் தொகையினைச் செலுத்தினார்.

**கட்டபொம்மனும் பாளையக்காரர்களின் கூட்டமைப்பும்:**

1. சிவகங்கையில் மருதுபாண்டியர் ஏற்படுத்திய தென்னிந்தியக் கூட்டமைப்பு கட்டபொம்மனின் ஆர்வத்தைத் தூண்டியது.
2. மருது சகோதரர்களும், கட்டபொம்மனும் இணைந்து ஆங்கிலேயரை எதிர்ப்பது என்று முடிவெடுத்தார்கள்.
3. கட்டபொம்மன் தளது செல்வாக்கைப் பயன்படுத்தி சிவகிரி பாளையக்காரரைத் தங்களோடு இணைக்க முயன்றார். அவர் அதற்கு மறுத்ததால் சிவகிரியை நோக்கி கட்டபொம்மன் முன்னேறினார்.
4. கட்டபொம்மனின் சிவகிரி நோக்கிய படை நகர்வை தங்களுக்கு விடப்பட்ட சவாலாகவே கம்பெனியார் கருதினர்.

**பாஞ்சாலங்குறிச்சி முற்றுகை:**

1. 1799இல் வெல்லஸ்லி பிரபு திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் மதுரை பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படைகளை திருநெல்வேலி நோக்கிச் செல்ல உத்தரவிட்டார்.
2. கட்டபொம்மனை சரணடையக் கோரிய நிபந்தனையொன்று 1799 செப்டம்பர் 1 அன்று வழங்கப்பட்டது.
3. கட்டபொம்மனின் பிடிகொடுக்காத பதிலால் பானெர்மென் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை தாக்கினார்.
4. மேலும் செப்டம்பர் 5 அன்று முழுபடையையும் பாஞ்சாலங்குறிச்சியில் கொண்டுவந்து நிறுத்தினார்,
5. அவர்கள் கோட்டையின் அனைத்துத் தொடர்புகளையும் துண்டித்தனர். பானெர்மென் இராமலிங்கரை தூதனுப்பி கட்டபொம்மனை சரண்டையுமாறு கேட்டுக்கொண்டார். கட்டபொம்மன் மறுத்தார்.
6. கோட்டையின் இரகசியங்கள் அனைத்தையும் இராமலிங்கர் சேகரித்தார். அவரது அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு பானெர்மென் தாக்குதல் உத்திகளை வடிவமைத்தார்.

**கட்டபொம்மன் தூக்கிலிடப்படல்:**

1. கட்டபொம்மன் புதுக்கோட்டைக்கு தப்பிச்சென்றார். எட்டையபுரம் மற்றும் புதுக்கோட்டை அரசர்களால் துரோகமிழைக்கப்பட்ட கட்டபொம்மன் இறுதியில் பிடிபட்டார்.
2. பானெர்மென் விசாரணயின்போது கட்டபொம்மன் தன்மீது சுமத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளையும் ஏற்றுக் கொண்டார்.
3. திருநெல்வேலிக்கு மிக அருகேயுள்ள கயத்தாறின் பழைய கோட்டைக்கு முன்பாக இருந்த புளியமரத்தில் சக பாளையக்காரர்களின் முன்னிலையில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார்.

17) சிவகங்கையின் துன்பகரமான வீழ்ச்சிக்குக் காரணமானவற்றை ஆய்ந்து அதன் விளைவுகளை எடுத்தியம்புக.

**பதில் : சிவகங்கையின் வீழ்ச்சிக்கான காரணங்கள்:**

1. கட்டபொம்மனின் சகோதரர்களான ஊமைத்துரையும், செவத்தையாவும் பாளையங்கோட்டைச் சிறையிலிருந்து தப்பி கமுதியில் பதுங்கியிருப்பதை அறிந்த சின்ன மருது அவர்களைத் தமது தலைமையிடமான சிறுவயலுக்கு அழைத்துச் சென்றார்.
2. காலின் மெக்காலே தலைமையிலான பிரிட்டிஷ் படைகள் மீண்டும் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை முற்றுகையிட்டதால் கட்டபொம்மனின் சகோதரர்கள், மருது சகோதரர்களிடம் சிவகங்கையில் அடைக்கலம் கோரினர்.
3. தப்பியோடியவர்களை ஒப்படைக்கும்படி மருது சகோதரர்கள் பிரிட்டிஷாரால் வலியுறுத்தப்பட்டனர். ஆனால் அவர்கள் மறுத்து விட்டார்கள்.
4. இதனால் கர்னல் அக்னியூவும், கர்னல் இன்னஸும் சிவகங்கையை நோக்கி படைநடத்திச் சென்றனர்.
5. மருது சகோதரர்கள் 1801இல் நாட்டின் விடுதலையை முன்னிறுத்தி "திருச்சிராப்பள்ளி பேரறிக்கையை " வெளியிட்டனர்.
6. ஆங்கிலேயருக்கு எதிராகச் செயல்பட விழைந்த தமிழகப் பாளையக்காரர்கள் பலரும் ஒன்று திரண்டனர்.
7. சின்ன மருது ஏறத்தாழ 20,000 ஆட்களை ஆங்கிலேயருக்கு எதிராகத் திரட்டினார்.
8. வங்காளம், சிலோன், மலேயா ஆகிய இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் படைகள் விரைந்து வந்தன.
9. புதுக்கோட்டை, எட்டையபுரம் மற்றும் தஞ்சாவூரின் அரசர்கள் பிரிட்டிஷாருடன் கைகோர்த்தார்கள்.
10. ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை என்ற உத்தி விரைவில் பாளையக்காரர்களின் படைகளில் பிரிவினையை ஏற்படுத்தியது.

**சிவகங்கையின் வீழ்ச்சி:**

1. ஆங்கிலேயர்கள் மே 1801இல் தஞ்சாவூரிலும் திருச்சியிலும் இருந்த கலகக்காரர்களைத் தாக்கினார்கள்.
2. கலகக்காரர்கள் பிரான்மலையிலும், காளையார் கோவிலிலும் தஞ்சம் புகுந்தனர்.
3. இறுதியாக வலுவான இராணுவமும், சிறப்பான தலைமைத்துவமும் கொண்ட ஆங்கிலேய கம்பெனி விஞ்சி நின்றது.
4. கலகம் தோற்றதால் 1801இல் சிவகங்கை இணைக்கப்பட்டது.

**விளைவுகள்:**

1. இராமநாதபுரத்தின் அருகே அமைந்த திருப்பத்தூர் கோட்டையில் 1801 அக்டோபர் 24ல் மருது சகோதரர்கள் தூக்கிலிடப்பட்டனர்.
2. ஊமைத்துரையும், செவத்தையாவும் பிடிக்கப்பட்டு 1801 நவம்பர் 16ல் பாஞ்சாலங்குறிச்சியில் தலை துண்டிக்கப்பட்டனர்.
3. கலகக்காரர்களில் 73 பேர் பிடிக்கப்பட்டு மலேயாவின் பினாங்கிற்கு நாடு கடத்தப்பட்டார்கள்.
4. பாளையக்காரர்களின் கலகம் அடக்கப்பட்டது.
5. 1801 ஜூலை 31 ல் ஏற்பட்ட கர்நாடக உடன்படிக்கையின்படி பிரிட்டிஷார் தமிழகத்தின் மீது நேரடிக்கட்டுப்பாட்டை ஏற்படுத்தினர்.
6. பாளையக்காரர் முறை முடிவுக்கு வந்தது.
7. அனைத்துக் கோட்டைகளும் இடிக்கப்பட்டு அவர்களது படைகள் கலைக்கப்பட்டன.

18) வேலூரில் 1806இல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.(அல்லது) வேலூர் புரட்சிக்கான காரணங்கள் மற்றும் விளைவுகள் யாவை?

**பதில் : புரட்சிக்கான காரணங்கள்.**

**இந்திய வீரர்களின் மனக்குறை:**

1. பிரிட்டிஷாரின் இராணுவத்தில் சிப்பாயாகப் பணியாற்றிய இந்தியர்களுக்கு குறைவான ஊதியமே வழங்கப்பட்டது.
2. பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் குறைவாகவே இருப்பதும், தங்களின் சமூக மற்றும் சமய நம்பிக்கைகளுக்கு ஆங்கிலேய அதிகாரிகள் குறைவான மதிப்பளித்ததும் இந்திய வீரர்களின் கோபத்தை வலுப்படுத்தியது.
3. விவசாய பின்னணி கொண்ட வீரர்களின் வேளாண் சிக்கலும் அவர்களை மேலும் சிரமப்படுத்தியது.
4. நிலக்குத்தகை முறையில் ஒரு நிலையற்ற தன்மை காணப்பட்டதாலும், 1805 இல் பஞ்சம் ஏற்பட்டதாலும் பல சிப்பாய்களின் குடும்பங்கள் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தன.
5. திப்புவின் மகன்களும் அவர்தம் குடும்பத்தினரும் வேலூர் கோட்டையில் சிறை வைக்கப்பட்ட வேளையில் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தும் வாய்ப்பு கூடிவந்தது.

**புதிய இராணுவ விதிமுறை**

1. சர் ஜான் கிரடாக் வெளியிட்ட புதிய இராணுவ விதிமுறைகளின்படி, இந்திய வீரர்கள் சீருடையிலிருக்கும்போது சாதி அடையாளங்களையோ, காதணிகளையோ அணியக்கூடாது என கேட்டுக் கொள்ளப்பட்டனர்.
2. அவர்கள் தாடியை முழுமையாகச் சவரம் செய்யவும் மீசையை ஒரே பாணியில் வைத்துக் கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டனர்.
3. விலங்கு தோலினால் ஆன இலச்சினையை கொண்ட புதிய தலைப்பாகையை அணிந்திட வற்புறுத்தப்பட்டனர்.
4. புதிய தலைப்பாகையை அணிவதில் தங்களுக்கு உடன்பாடில்லை என்பதை இந்திய சிப்பாய்கள் போதுமான முன்னெச்சரிக்கை விடுத்தனர். ஆனால் கம்பெனி நிர்வாகம் அதனை கவனத்தில் கொள்ளவில்லை.

**புரட்சி வெடித்தல்:**

1. 1806 ஜூலை 10 அன்று அதிகாலையிலேயே இந்திய சிப்பாய்கள் புரட்சியில் இறங்கினர்.
2. கோட்டைக் காவற்படையின் உயர்பொறுப்பு வகித்த பேன்கோர்ட் என்பவர் முதல் பலியானார்.
3. அடுத்ததாக இருபத்திமூன்றாம் படைப்பிரிவைச் சேர்ந்த கர்னல் மீக்காரஸ் கொல்லப்பட்டார்.
4. கோட்டையைக் கடந்து சென்று கொண்டிருந்த மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங் சூழலை விசாரித்தறிய முற்பட்டபோது அவரது உடல் தோட்டாக்களால் துளைக்கப்பட்டது.
5. ஏறத்தாழ பன்னிரெண்டுக்கும் அதிகமான அதிகாரிகள் அடுத்த ஒரு மணி நேரத்திற்குள் கொல்லப்பட்டார்கள்.

**ஜில்லஸ்பியின் கொடுங்கோன்மை:**

1. ' கேப்டன்' யங்கின் தலைமையிலான குதிரைப் படைப்பிரிவுடன் காலை 9 மணியளவில் கர்னல் ஜில்லஸ்பி கோட்டையை வந்தடைந்தார்.
2. இதற்கிடையில் புரட்சிக்காரர்கள் திப்புவின் மூத்த மகனான ஃபதே ஹைதரை புதிய மன்னராக பேரறிக்கை செய்து மைசூர் சுல்தானின் புலிக் கொடியை கோட்டையில் ஏற்றியிருந்தனர்.
3. போர் விதிமுறைகள் எதையும் பொருட்படுத்தாத ஜில்லஸ்பி வீரர்களின் புரட்சியை வன்மையாக ஒடுக்கினார்.
4. கோட்டையில் மட்டும் எண்ணூறு வீரர்கள் பிணமாகக் கிடந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
5. திருச்சிராப்பள்ளியிலும், வேலூரிலும் அறுநூறு வீரர்கள் விசாரணையை எதிர்நோக்கி சிறையிலடைக்கப் பட்டனர்.

**புரட்சியின் பின்விளைவுகள்:**

1. திப்புவின் மகன்களை கல்கத்தாவுக்கு அனுப்ப உத்தரவிடப்பட்டது.
2. புதிய இராணுவ விதிமுறைகள் திரும்பப் பெறப்பட்டன.

19) வேலுநாச்சியார் பிரிட்டிஷ் காலனியாதிக்க அதிகாரத்தை எதிர்த்த விதத்தினை விவரி.

**பதில் :** 1. முத்துவடுகநாதர் காளையார்கோயில் போரில் கொல்லப்பட்ட பிள், வேலுநாச்சியார் தனது மகளோடு தப்பிச் சென்று கோபால நாயக்கரின் பாதுகாப்பில் திண்டுக்கல் அருகே உள்ள விருப்பாட்சியில் எட்டு ஆண்டுகள் வாழ்ந்தார்.
2. மறைந்து வாழ்ந்த காலத்தில் வேலுநாச்சியார் ஒரு படைப்பிரிவை உருவாக்கியதோடு கோபால நாயக்கர் மற்றும் ஹைதர் அலியோடு ஒரு கூட்டணியை ஏற்படுத்திக் கொண்டார்.
3. வேலுநாச்சியாரின் சார்பில் ஹைதர்அலிக்கு தளவாய் தாண்டவராயனார் எழுதிய கடிதத்தில் ஆங்கிலேயரைத் தோற்கடிக்கும் பொருட்டு 5000 காலாட்படைகளும் 5000 குதிரைப் படைகளும் அனுப்பும்படி அவரிடம் கோரினார்.
4. வேலுநாச்சியார் உருது மொழியில் தனக்கு கிழக்கிந்திய கம்பெனியோடு இருந்த பிணக்குகளை கடிதத்தில் விவரித்திருந்தார்.
5. மேலும் தான் ஆங்கிலேயரோடு மோதுவதில் தீவிரமாக இருப்பதைத் தெளிவுபடுத்தியிருந்தார்.
6. அவரது மன உறுதியைப் பார்த்து வியந்த ஹைதர் அலி தனது திண்டுக்கல் கோட்டை படைத்தலைவரான சையத்திடம் அவருக்கு வேண்டிய இராணுவ உதவிகளை வழங்குமாறு ஆணையிட்டார்.